**டிசம்பர் – 26**

# TNPSC துளிகள்

- காவல் நிலையங்களைப் பொதுமக்கள் எளிதில் (குறிப்பாகப் பெண்கள்) அணுகும் வகையில் மாற்றுவதற்காக ஆந்திர மாநில அரசால் ஏற்படுத்தப்பட்ட ஒரு முன்னெடுப்பான ஸ்பந்தனா ஆனது பாராட்டுகளையும் விருதுகளையும் வென்று வருகின்றது.
- பிற உயிரினங்களை இரையாக உட்கொள்ளும் உலகின் மிகவும் பொதுவான பறவைகளில் ஒன்றான பெரேக்ரின் ஃபால்கன் (வல்லூறு) ஆனது விலங்கு இனங்களில் மிகவும் விரைவான பார்வை கொண்டதாக உள்ளது.

# தேசியச் செய்திகள்

## ‘இந்திய மாநிலங்களில் மனநல கோளாறுகள் குறித்த சுமை: உலகளாவிய நோய்களின் சுமை குறித்த ஆய்வு 1990-2017’

- இந்த ஆய்வானது இந்திய மருத்துவ ஆராய்ச்சி மன்றம் (Indian Council of Medical Research - ICMR) மற்றும் இந்தியப் பொதுச் சுகாதார அமைப்பு (Public Health Foundation of India - PHFI) ஆகியவற்றால் நடத்தப்பட்டது.
- பல்வேறு வகையான மனநலக் கோளாறுகள் இந்தியாவில் அதிக எண்ணிகையிலான மக்களை, குறிப்பாக தென்னிந்திய மாநிலங்களில் உள்ள மக்களை மிகவும் மோசமாக பாதிக்கின்றன.
- உயர் சமூக - மக்கள்தொகை குறியீட்டின் (Socio - demographic index - SDI) மாநிலக் குழுவில் தமிழ்நாடு, கேரளா, கோவா மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் மனச் சோர்வுக் கோளாறுகள் அதிக அளவில் பரவிக் காணப் படுகின்றன. இதில் ஆந்திரப் பிரதேச மாநிலம் நடுத்தர மாநிலக் குழுவில் உள்ளது.
- 2017 ஆம் ஆண்டில் ஏழு இந்தியர்களில் ஒருவர் மாறுபட்ட தீவிரத் தன்மை கொண்ட மனநலக் கோளாறுகளால் பாதிக்கப் பட்டுள்ளார்.
- தென் மாநிலங்களில் மனச்சோர்வு, கவலை மற்றும் பதற்றம் தொடர்பான கோளாறுகள் அதிகமாக இருப்பது, இந்த மாநிலங்களில் நவீனமயமாக்கல் மற்றும் நகரமயமாக்கலின் உயர்நிலை விகிதங்களுடன் தொடர்புடையதாக இருக்கலாம்.

## அரசியலமைப்பு (பட்டியலிடப்பட்ட பழங்குடியினர்) ஆணை (இரண்டாவது திருத்தம்) மசோதா, 2019

- இது 2019 ஆம் ஆண்டு ஜனவரி 9 அன்று மத்தியப் பழங்குடியின விவகாரங்கள் துறை இணை அமைச்சரான ரேணுகா சிங் சருதா என்பவரால் மாநிலங்களவையில் அறிமுகப் படுத்தப்பட்டது.
- அரசியலமைப்பு (பட்டியலிடப்பட்ட பழங்குடியினர்) ஆணை, 1950 ஆனது பழங்குடியினர் மற்றும் பழங்குடிச் சமூகங்களைப் பட்டியலிடப்பட்ட பழங்குடியினராகக் கருதப்படும் என்று குறிப்பிடுகின்றது.
- இந்த மசோதாவானது கர்நாடகாவில் உள்ள பட்டியலிடப்பட்ட பழங்குடியினரைக் குறிப்பிடும் ஆணையின் ஆறாம் பிரிவைத் திருத்துகின்றது.
- இது பின்வருவனவற்றை மாற்றுவதன் மூலம் இந்த ஆணையைத் திருத்துகின்றது:

- "நாயக்தா, நாயக்கா" ஆகியவற்றிற்குப் பதிலாக "நாயக்தா, நாயக்கா" (பரிவரா மற்றும் தலவரா உட்பட) என்பதனைச் சேர்த்தல் மற்றும்
- "சித்தி" (உத்தர கன்னட மாவட்டத்தில்) என்பவற்றிற்குப் பதிலாக "சித்தி" (பெலகாவி, தார்வாட் மற்றும் உத்தர கன்னட மாவட்டங்களில்) என்பதனைச் சேர்த்தல்.

### "டால்பின் நோஸ்" நடவடிக்கை

- கடற்படைப் புலனாய்வு மற்றும் மத்தியப் புலனாய்வு அமைப்புகளுடன் இணைந்து நடத்தப்பட்ட ஒரு கூட்டு நடவடிக்கையில், வேவுப் பணியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் ஏழு கடற்படை வீரர்களை ஆந்திரப் போலீசார் கைது செய்துள்ளனர்.
- கிழக்குக் கடற்படைக் கட்டுப்பாட்டகத்தின் தலைமையகமானது விசாகப்பட்டினத்தில் அமைந்துள்ளது. விமானம் தாங்கிக் கப்பலான ஐஎன்எஸ் விக்ரமாதித்யா கார்வாரில் அமைந்துள்ளது.

### எதிர்காலத் திறன்கள்

- விப்ரோ நிறுவனம் நாஸ்காம் அமைப்புடன் (தேசிய மென்பொருள் மற்றும் சேவை நிறுவனங்களின் சங்கம்) இணைந்து இந்தியாவில் 20க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகளைச் சேர்ந்த 10,000 மாணவர்களுக்காக 'எதிர்காலத் திறன்கள்' என்ற ஒரு திறனளிக்கும் தளத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது "டேலண்ட்நெக்ஸ்ட்" என்ற விப்ரோவின் பெருநிறுவன சமூக பொறுப்புணர்வுத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

## சர்வதேசச் செய்திகள்

### ரோஹிங்கியா விவகாரம்

- மியான்மரின் தலைவரான ஆங் சான் சூகி என்பவர் இனப் படுகொலை தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் மியான்மருக்கு ஆதரவாகப் பேசினார்.
- இது ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச நீதிமன்றத்தில் காம்பியா நாட்டினால் தாக்கல் செய்யப்பட்ட ஒரு வழக்கு ஆகும்.
- ரோஹிங்கியா முஸ்லிம்கள் மியான்மரில் அதிக சதவீத அளவில் முஸ்லீம்களை பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர். இவர்களில் பெரும்பான்மையானவர்கள் ரக்கைன் என்ற மாகாணத்தில் வாழ்கின்றனர்.

### உலகளாவிய புகையிலைப் பயன்பாடு தொடர்பான போக்குகள்

- உலக சுகாதார அமைப்பானது உலகளாவிய புகையிலைப் பயன்பாடு குறித்த போக்குகள் என்ற தனது அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின் படி, உலகளவில் புகையிலையைப் பயன்படுத்தும் ஆண்களின் எண்ணிக்கையானது தற்பொழுது முதன்முறையாகக் குறைந்துள்ளது.
- உலகில் உள்ள அனைத்துப் பகுதிகளை விடவும் தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில் புகையிலை அதிகம் பயன்படுத்தப் படுகின்றது.

- இந்த அறிக்கையின் படி, 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2025 ஆம் ஆண்டில் புகையிலைப் பயன்பாட்டுக் குறைப்பான 30% என்ற இலக்கை அடைவதற்கான இந்தியாவின் பயணம் வழி தவறி இருக்கின்றது.
- இந்த இலக்கை அடைவதற்கான சரியான வழியில் பயணித்துக் கொண்டிருக்கும் ஒரே பகுதி அமெரிக்கா ஆகும்.

## ஐரோப்பியப் பசுமை ஒப்பந்தம்

- 2050 ஆம் ஆண்டிற்குள் "காலநிலைச் சமநிலைப் பகுதியாக" மாறுவதை உறுதி செய்வதற்காக, அனைத்து உறுப்பு நாடுகளையும் கட்டுப்படுத்தக் கூடிய ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதாக ஐரோப்பிய ஒன்றியம் உறுதியளித்துள்ளது.
- இது சமீபத்தில் நிறைவு பெற்ற வருடாந்திர மாட்ரிட் காலநிலை பேச்சுவார்த்தைகளின் ஒரு பகுதியாக இருந்தது.
- 28 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியமானது சீனா மற்றும் அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக பசுமை இல்ல வாயுக்களை அதிக அளவில் வெளியேற்றும் உலகின் மூன்றாவது பிராந்தியமாக உருவெடுத்துள்ளது.
- 2050 ஆம் ஆண்டின் “காலநிலை நடுநிலை இலக்கு” என்பதற்கு ஒப்புக் கொண்ட முதலாவது மிகப்பெரிய உமிழ்ப்பான் ஐரோப்பிய ஒன்றியம் ஆகும்.
- உமிழ்வுக் குறைப்புகளுக்காக 1990 என்ற அடிப்படை ஆண்டைத் தக்க வைத்துக் கொள்ளும் முக்கியமான உமிழ்வு நாடுகளில் ஐரோப்பிய ஒன்றியமும் ஒன்றாகும். இந்த அடிப்படை ஆண்டானது முதன்முதலில் அனைத்து வளர்ந்த நாடுகளுக்கும் கியோட்டோ நெறிமுறையின் கீழ் கட்டாயப்படுத்தப் பட்டுள்ளது.
- பெரும்பாலான பிற நாடுகள் தங்கள் அடிப்படை ஆண்டை 2005க்கு மாற்றின அல்லது பின்னர் 2015 ஆம் ஆண்டு பாரிஸ் ஒப்பந்தத்தின் கீழ் இந்த அடிப்படை ஆண்டை மாற்றி விட்டன.
- கியோட்டோ உடன்படிக்கையானது வளமான மற்றும் வளர்ந்த நாடுகள் வளரும் நாடுகளுக்கு காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராட நிதி மற்றும் தொழில்நுட்பத்தை வழங்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## நுண்புள்ளிகள்

- வாகனங்களில் நுண்புள்ளிகள் அடையாளங்காட்டிகளை நிர்ணயிப்பதற்கான விதிகளை மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.
- நுண்புள்ளித் தொழில்நுட்பம் என்பது வாகனத்தின் முழுப்பகுதி மற்றும் பாகங்களையும் அல்லது வேறு எந்த ஒரு இயந்திரத்தையும் நுண்ணிய புள்ளிகளால் தெளிப்பதாகும். இது அந்த வாகனத்திற்கு ஒரு தனித்துவமான அடையாளத்தை அளிக்கின்றது.
- இந்த நுண்புள்ளியை ஒரு நுண்ணோக்கியின் மூலம் நேரடியாகப் பார்க்க முடியும். இதை அதன் செறிந்த ஊதா நிற ஒளி மூலத்தைக் கொண்டு அடையாளம் காணலாம்.
- நுண்புள்ளிகள் மற்றும் பிசின் ஆகியவை அந்த வாகனத்தின் நிரந்தர சாதனங்கள் /இணைப்புப் பகுதியாக மாறிவிடும். அந்த பாகத்தை அல்லது வாகனத்தை சேதப் படுத்தாமல் இந்த நுண்புள்ளியை அகற்ற முடியாது.




### உயிரித் தொழில்நுட்பத் துறை மற்றும் தேசிய நோயெதிர்ப்பு நிறுவனம் ஆகியவற்றின் ஆய்வு - தட்டம்மை வைரஸ் பரவுதல்

- கர்ப்ப காலத்தின் போது வைரஸ் எதிர்ப்பு டிஎன்ஏவைத் தாயிடமிருந்து குழந்தைக்கு மாற்றுவதன் மூலம் அக்குழந்தைக்கு நோயெதிர்ப்பு திறன் நீண்ட காலத்திற்கு நீடிக்கும் என்று தேசிய நோயெதிர்ப்பு நிறுவனம் (National Institute of Immunology - NII) மற்றும் உயிரித் தொழில்நுட்பத் துறையைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்த வைரஸால் பாதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்ற ஒருவர் வாழ்நாள் முழுவதிற்குமான நோய் எதிர்ப்புச் சக்தியைப் பெறுகின்றார்.
- இந்த நோய் எதிர்ப்புச் சக்தியானது கர்ப்ப காலத்தின் போது குழந்தைகளுக்கு மாற்றப் படுகின்றது.
- தட்டம்மை என்பது வெரிசெல்லா ஜோஸ்டர் வைரஸால் ஏற்படும் ஒரு கொடிய தொற்று நோயாகும்.

### டிஎன்ஏ பகுப்பாய்வு மையம்

- சண்டிகரில் உள்ள மத்திய தடய அறிவியல் ஆய்வகத்தில் (Central Forensic Science Laboratory - CFSL) ஒரு அதிநவீன டிஎன்ஏ பகுப்பாய்வு மையத்தை மத்திய உள்துறை அமைச்சகம் துவக்கியுள்ளது.
- இந்த புதிய மேம்படுத்தப்பட்ட தடயவியல் டிஎன்ஏ பகுப்பாய்வு ஆய்வகமானது நிர்பயா நிதித் திட்டத்தின் கீழ் நிறுவப் பட்டுள்ளது.
- தடய அறிவியல் சேவைகள் இயக்குநரகமானது (Directorate of Forensic Science services - DFSS) மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் வருகின்றது.

## சுற்றுச்சூழல் செய்திகள்

### "பசுமை (சுற்றுச்சூழல் சார்ந்த) மன்றம்" என்ற ஒரு திட்டம்

- மத்திய சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகமானது (Ministry of Environment, Forest and Climate Change - MoEFCC) முதன்முறையாக "பசுமை (சுற்றுச்சூழல்

சார்ந்த) மன்றம்" (Ecoclub) என்ற ஒரு திட்டத்தை செயல்படுத்தும் மாநிலத் தலைமை நிறுவனங்களின் ஒரு வருடாந்திரக் கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது.

- பசுமை மன்றமானது சுற்றுச்சூழல் கல்வி விழிப்புணர்வு மற்றும் பயிற்சியின் (EEAT - Environment Education Awareness and Training - EEAT) கீழ் தொடங்கப் பட்டுள்ளது.
- இந்தக் கூட்டமானது குஜராத்தில் உள்ள GEER என்ற அமைப்பின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
- இந்த நிகழ்வின் போது "பசுமை மன்றங்களின் பார்வை" மற்றும் சர்வதேச சுற்றுச்சூழல் மாநாடுகள் & நிகழ்ச்சிகள் குறித்த கையேடு ஆகிய இரண்டு புத்தகங்கள் வெளியிடப் பட்டன.
- தேசிய பசுமைப் படையானது (National Green Corps - NGC) MoEFCC ஆல் தொடங்கப்பட்டது. இந்தப் படையானது இந்தியா முழுவதும் 1,20,000 பள்ளிகளை உள்ளடக்கியுள்ளது.

# மாநிலச் செய்திகள்

## ஆக்ஸிஜன் நிலையம்

- மகாராஷ்டிராவில் உள்ள நாசிக் ரயில் நிலையத்தில் இந்திய ரயில்வேயானது ஏரோ கார்ட் என்ற அமைப்புடன் இணைந்து ஒரு 'ஆக்ஸிஜன் நிலையத்தை' திறந்துள்ளது.
- இந்த முயற்சியானதுப் பயணிகளுக்குச் சுத்தமான காற்றை சுவாசிக்கும் அனுபவத்தை வழங்க முற்படுகின்றது.
- ஆக்ஸிஜன் நிலையம் என்ற கருத்தானது தேசிய வானூர்தியியல் மற்றும் விண்வெளி நிர்வாகத்தின் பரிந்துரையின் அடிப்படையில் அமைந்துள்ளது.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## புதிய வெளியுறவுத் துறைச் செயலாளர்

- இந்தியாவின் பிரதமர் தலைமையிலான அமைச்சரவை நியமனக் குழுவானது (Appointments Committee of Cabinet - ACC), அமெரிக்காவில் தற்போது இந்தியாவிற்கான தூதராகப் பணியாற்றி வரும் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லாவை அடுத்த வெளியுறவுத் துறை செயலாளராக நியமிக்க ஒப்புதல் அளித்துள்ளது.
- எச்.வி.ஷ்ரிங்லா அடுத்த இரண்டு ஆண்டு காலத்திற்கு வெளியுறவுத் துறை செயலாளராகப் பணியாற்ற இருகின்றார். தற்போதைய வெளியுறவுத் துறை செயலாளரான விஜய் கோகலேவிற்குப் பதிலாக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.


***ACC இன் உறுப்பினர்கள்***

- பிரதமர்
- மத்திய உள்துறை அமைச்சர்.

# முக்கிய தினங்கள்

## நல்லாட்சி தினம் - டிசம்பர் 25

- இத்தினமானது 2014 ஆம் ஆண்டில் மத்திய அரசால் நிறுவப்பட்டது.
- இந்தியாவின் முன்னாள் பிரதமரான அடல் பிஹாரி வாஜ்பாயின் பிறந்த நாளை நினைவு கூறுவதற்காக இத்தினம் கொண்டாடப்படுகின்றது.
- அடல் பிஹாரி வாஜ்பாய் 1924 ஆம் ஆண்டு டிசம்பர் 25 அன்று பிறந்தார்.
- இவர் மூன்று முறை இந்தியாவின் பிரதமராகப் பணியாற்றினார்.
- இவர் முதல் முறையாக 1996 ஆம் ஆண்டில் 13 நாட்களும் இரண்டாவது முறையாக 1998-1999ல் 13 மாதங்களும் பிரதமராகப் பணியாற்றினார்.
- மூன்றாவது முறையாக பிரதமராகப் பணியாற்றிய போது, இவர் தனது முழு ஐந்தாண்டு பதவிக் காலத்தையும் நிறைவு செய்தார். இவர் காங்கிரஸ் கட்சி மூலமாக தேர்ந்தெடுக்கப் பட்டவராக இல்லாத இந்தியாவின் முதல் பிரதமராக தனது முழுப் பதவிக் காலத்தையும் நிறைவு செய்தார்.
- 2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், வாஜ்பாய் மற்றும் பண்டித மதன் மோகன் மாளவியா (மரணத்திற்குப் பின்) ஆகியோருக்கு இந்தியாவின் மிக உயர்ந்த குடிமக்கள் விருதான பாரத் ரத்னா விருது வழங்கப்பட்டது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★